20 காசு

காஞ்சி

3-4-69

நிறுவனர்: அண்ணாதுரை

5-39.

5' 39

வினா-விடை

1. தனி மாநிலக் கோரிக்கையும் — பிரிவினைக் கோரிக்கையும் ஒன்றா?

ஒன்றல்ல என்பதனைப் புரிந்துகொண்டாலும், புரிந்துகொள்ளாதவர்கள்போல அது பற்றிப் பிரமாதப் படுத்துவதாலேயே பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. மாநிலப் பிரிவினையை சட்டம் எதிர்க்கவில்லை. தனி பிரிவினை மூலம் சுயாட்சி ஏற்படுவதை சட்டத்தின் மூலம் தடுத்திருக்கிறார்கள்; அதுவும் அண்மைக் காலமாக!

2. சென்னையில் அடிக்கடி டாக்சிகள் வேலை நிறுத்தம் ஏற்படுவது எதனால்?

நாகரிகம் உயர்ந்தோங்கி வளர்ந்து வருவதால்! மட்டு—மரியாதைகள் காற்றிலே பறந்து விடுவதால்!!

3. காங்கிரசைக் கலைத்து விட வேண்டுமென்ற ஒரு தனியார் தீர்மானம் நிறைவேற்றி வைக்கப்படுமா?

காங்கிரசுக்காரர்கள் இப்போது அதனைச் செயல்படுத்த மாட்டார்கள். 1972ல் மக்கள் அதனைச் செய்துவிடுவார்கள். அதுவரையில் பொறுத்திருங்கள்.

4. தமிழக அரசின் சில இலாகாக்கள் மிகவும் மந்தமாகச் செயல்படுவது தவிர்க்க முடியாதா?

நீங்கள் கல்வித் துறையைக் குறிப்பிடுகிறீர்கள் என்றே தோன்றுகிறது. அந்த இலாகா உச்சி முதல் அடி வரையில் உறக்கத்திலிருக்கிறது. விழித்தெழுந்தவுடன் சுறுசுறுப்படையும். அவசரப்படாதீர்கள்.

5. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் வேறுபாடுகள் என்ன?

மத்திய அரசு—மூளை; மாநில அரசு — இயக்கம் என்று முதலமைச்சரே சொல்லி இருக்கிறார். மத்திய அரசு இலாகாக்கள் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனிக்கின்றன; மாநில அரசின் இலாகாக்கள் பிரச்னைகளைத் தொடவே ஆறு மாதம், ஒரு வருடம் என்று தேவைப்படுகிறது! இதுதான் பிரதான வேறுபாடு என்று தெரிகிறது.

6. தியாகி தேவதாசுக்கு நினைவு நாள் கொண்டாடுவார்களா?

நினைவு நாள் கொண்டாடக் கூடிய அளவுக்கு தேவதாஸ் தியாகம் செய்து இருப்பதாகக் காங்கிரஸ் நினைக்கவில்லை. அதோடு, தேவதாஸ் பற்றி அது மறந்துகூடவிட்டது. நீங்கள் ஏன் வீண் சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டும்?

7, 'சுதேசமித்திரன்' இதழுக்குக் கொள்கை ஏதேனும் உண்டா?

எல்லா பத்திரிகைகளும் ஏதேனும் ஒரு கொள்கையை உள்ளடக்கிதான் வெளியிடப்படுகின்றன. சுதேசமித்திரன், கழக அரசு எதிர்ப்புப் பணியைக் கொள்கையாய்க் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது.

8. தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடியையே நிறுத்திவிட முடிவெடுத்திருக்கிறார்களாமே, உண்மையா!

அப்படி சில செய்திகள் 'காற்றிலே' வந்து கொண்டிருக்கின்றன—அரசியல் வளர்ணத்தில்!

9, மாஸ்கோவில் மதுவிலக்கு உண்டா?

இங்கே இருப்பதைப்போன்ற 'விலக்கு' அங்கே இல்லை. ஆனால் குடிப்பதை அனுமதிக்கிறது. அதேபோது பொதுவிடங்களில், குடித்துவிட்டுக் கும்மாளம்போடுவதைத் தடுக்கிறது. தண்டிக்கிறது.

10. பூரிசாமியாரின் நடத்தை எதைப் பிரதிபலிக்கிறது?

பெரியார் ஈ. வே. ரா. அவர்களது சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களுக்கு மக்கள் முழு அளவு செவிமடுக்காதன் விளைவு என்பதைப் பிரதிபலிக்கிறது. அதோடு பேரறிஞர் அண்ணாவின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை உடனே பரப்பப்படவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

11. பூரி மடத்துச் சாமியார் போல, வேறுயாராவது பேசி இருந்தால், நடந்திருந்தால்?...

இன்னேரம் அவரை இந்திய அரசு வெளியே நடமாடவிட்டு வைத்திருக்காது. பேசப்பட்ட இடத்தில் கூடியிருந்த கூட்டமே கூட அவரைக் கொன்று போட்டிருக்கும்!

12. 'அழகிப் போட்டி'கள் நடத்துவதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

முதலில் 'வாழ்க்கைப் போட்டி'யை நடத்தி முடிப்போம்! அதில் வென்று உயிர் எஞ்சியிருந்தால் அதுபோன்ற பொழுதுபோக்குகளைக் 'கண்டு' ஆனந்திப்போம்!

13. 'காஞ்சி'யில் ஆசிரியருக்குக் கடிதம் எழுதினால் பிரசுரிப்பீர்களா?

கடிதத்தின் தரம், தகுதி, முக்கியத்துவம் கருதி வெளியிடப்படும்.

14. அடுத்த பொதுச்செயலாளர் யாராக விருக்கும் என்பதற்கு ஒரு 'கோடி' காட்டுவீர்களா?

யாராக விருந்தாலும், அதனைப் பொதுக்குழு கூடி முடிவெடுக்கும். அந்த முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியது நமது கடமை.

15. ஆபாசம் எங்கிருந்து உற்பத்தியாகிறது?

சினிமாவிலிருந்து—என்று சொல்ல வேண்டுமென எதிர்பார்க்கிறீர்களா? நான் சொல்வது, நாகரிகத்திலிருந்து.

16. 'வெண்பாப் போட்டி' தொடங்குவதாக அறிவித்திருந்தீர்களே, என்ன ஆயிற்று.

பலபேர் அதனை இப்போது விரும்பவில்லை.

'இருதயத்தில் ஓர் ரோஜா'

தவிர்க்க முடியாத சில அசந்தர்ப்பங்களால் இக்கிழமை, 'இருதயத்தில் ஓர் ரோஜா' தொடர்கதை வெளிவரவில்லை. அடுத்த கிழமை முதல் தொடர்ந்து வெளிவரும்.

—ஆசிரியர்

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 13—4—69 | இதழ் 39

கல்வி என்ருல் என்ன? (2)

கல்வி என்பது ஒரு தத்துவம் — கல்வி என்பது ஒரு தலைமுறை—கல்வி என்பது ஒரு வாழ்க்கை முறை என்று சென்ற கிழமை அறிவித்திருந்தோம். காமராசர் கல்விபற்றி அறிவித்திருந்த சில கருத்துக்கள், நம்மை அதுபற்றிச் சிந்திக்க வைத்தது.

நாடெங்கும் பரவலாக, உயர்மட்டக் கல்வி மட்டுமல்லாமல், கீழ் மட்டத்திலுமாகக் கல்வித்தரம் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளையும் விளக்கி இருந்தோம்.

கல்வி என்பது கண்ணை ஒத்தது என்பார்கள். அதனுலேயே, அதிகப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படக் காரணமாகவிருந்த காமராசருக்கு கல்விக்கண்ணைத் திறந்தவர் என்று பாராட்டும் சேர்ந்தது.

கல்வி முறையினை பரவலாக மட்டும் அமைத்துக் கொண்டு செல்வதிலே செலுத்தப்பட்ட கவனம்தான், அத்துறையில் சீர்கேடுகளை மிகுதிப்படுத்திவிட்டிருக்கிறது என்பது நமது முக்கிய குற்றச்சாட்டு.

இது குறித்து ஆராயவேண்டியது நமது கடமையாகும். நிறைய பள்ளிக்கூடங்களைத் திறக்கவேண்டும் என்ற ஆர்வம்காரணமாகத்திறந்துவைத்துக்கொண்டே சென்ற நிலைமை, அது சீராக செம்மையாகச் செயல்படுகிறதா என்பதிலே செலுத்தப்படவில்லை.

போதனமுறை ஒழுங்கு முறைக்கு உட்பட்டும், கடமை உணர்வோடும் அமைந்திருக்கிறதா என்றும் கண்காணிக்கப்படாமல் போயிற்று. இந்த முயற்சியிலே ஈடுபட்டவர்களது முக்கிய எண்ணம், எண்ணிக்கையை மிகுதிப்படுத்திக் காட்டவேண்டும் என்பதாகத் தானிருந்ததே ஒழிய, அவற்றின் இயக்கம் எப்படி இருக்கிறது? செயலாற்றல் தன்மை யாது? என்பதன் அருகில்கூட அவர்கள் வர மறுத்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

கீழ்மட்டத்தில் உருவான இந்த நிலை, மேல் மட்டத்தை எட்டி அது அப்படியே பிரதிபலிக்கத் தொடங்கியபோது, மேல் மட்ட கல்வித் துறையினருக்குத் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளவாவது, வெற்றி பெறுவோர் பட்டியலை மிகுதிப்படுத்திக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் தானுக ஏற்பட்டது.

இப்போதைய பரீட்சை முறைப்படி அந்த தொகை, படுபாதாளத்துக்குச் சென்று கொண்டிருப்பதனைத் தடுத்து நிறுத்த எப்படியாவது தேர்வு பெற்றோரை பெருக்கிக் காட்ட நிர்ப்பந்தித்தது. இதற்காகச் சில பல கொள்கைகளை வகுத்துக்கொண்டு, போதிய மதிப்பெண்கள் இருந்தாலும், இல்லாதொழிந்தாலும், மதிப்பெண்களை மிகுதிப்படுத்திக் காட்டி தேர்வு பெறச் செய்யும் திட்டம் உருவாயிற்று.

இதே வேளையில், அரசியல் கட்சிக்காரர்கள் வேறு, போட்டி மனப்பான்மையோடு, மாணவர்களது ஆதரவு தங்களுக்குத்தான் இருக்கிறது என்பதைக் காட்ட, மாணவர்கள் இருக்கு ம பக்கம் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் நடமாடத் தொடங்கினர்கள்.

இந்தக் கட்சி—அந்தக் கட்சி என்று குறிப்பிட்டுக் காட்டத் தேவையில்லாத அளவுக்கு மாணவர்களிடம் செல்வாக்குத் தேடிக்கொள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும் முந்தி முனையும்போது—அதிலே ஏதோ ஒரு சுவை இருப்பதாகக் கருதி மாணவர் உலகமும், அரசியல் வாதிகளின் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க முன்வந்தது.

ஏற்கெனவே கெட்டுக் கொண்டிருந்த தரம், இதனுல் பெரும் அளவுக்குக் கெட ஏதுவாயிற்று.

கல்விக்கூடங்களின் கடமை என்ன என்ற எண்ணத்திலிருந்து, இன்றைய அரசியல் நிலவரம் என்ன என்பதிலே அதிக அக்கறை காட்டவேண்டிய சூழல் தானுகவே உருவானது.

வெளியிலே தனி இயக்கமாக இயங்கிக் கொண்டு வரும் அரசியல் கருத்துக்கள்—கொள்கைகள்—மோதல்கள், மாணவர்களிடையும் புகுந்து பிளவு மனப்பான்மையிலும், மோதல், அடிதடி என்ற வகையிலும் உருப்பெற்று, அதன் எதிரொலியாக—

> வெளியே எந்த ஒரு அரசியல் கூக்குரல் கிளப்பப்பட்டாலும், பக்கக்குரலாக மாணவர்களது குரலும் இருக்க வேண்டும்.

என்ற நிலைமையும் உருவாக்கப்பட்டது. அதன் பலன் தான் இன்று பேரறிவாளர் பலரும், 'தரம்,தரம்' என்பது பற்றிக் குரல் கொடுக்க வேண்டியவர்களாக விருக்கிருர்கள்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு வரையில் இந்த நாட்டை ஆண்ட காங்கிரசுக் கட்சி, நேர்முகமாகவும் மறைமுகமாகவும், போதகாசிரியர்களை அரசியல் பணிகளில் ஈடுபடுத்தத் தொடங்கியது. அரசியல் வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்குத் தலையெடுக்கத் தொடங்கியதும், ஆசிரியர்களது கவனமும் அரசியல் சதுரங்கத்திலே ஈர்க்கப்பட்டு, அது 'பாட போதனை' வரையிலே வந்து நின்றது.

இவையும், மாணவர்களது அக்கறையினையும் கடமையினையும் பிறழச் செய்யக்கூடிய காரணங்களாக உருமாறிவிட்டன.

அதே வேளையில், இலவசக் கல்வி என்ற முறை புகுத்தப்பட்டபோது, பிள்ளைகளது கல்வியில் பெற்றோருக்கிருந்த அக்கறையும் பின்னடைந்தது. அதன் எதிரொலியாக, பிள்ளைமீதான கண்காணிப்புக் குன்றியது. விளைவு, மாணவர்கள் தம் இஷ்டசித்தப்படியான போக்குகளில் ஈடுபடும் வாய்ப்பினைத் தேடித் தந்தது.

1. பெற்றோர்களால் கண்காணிப்பற்ற நிலை,
2. அரசு, மாணவர்களையும், ஆசிரியர்களையும் அரசியல் பணியிலே ஈடுபடுத்திக்கொண்டு வந்த கொடுமை.
3. இலவசக் கல்வி முறை.
4. அரசியல் வாதிகளின் தலையீடு.

(14-ம் பக்கம் பார்க்க)

தம்பி

உள்ளன்புடன், ஓய்வின்றித்தான் நீயும் எண்ணற்ற இளைஞர்கள் பலரும் பணியாற்றிக்கொண்டு வருகிறீர்கள் — பொதுக்கூட்டங்களிலே உணர்ச்சி வெள்ளம் காண்கிறேன்—மாநாடுகளிலே மட்டற்ற எழுச்சி தெரிகிறது — நமது கழகம் எங்கும் எழிலுடன் வளர்ந்து வருவது விளக்கமாகத் தெரிகிறது—பொலிவும் வலிவும் பூரிக்கத்தக்க விதமாகக் காணப்படுகிறது — அண்ணா! இந்த ஆர்வத்துக்கு ஈடாக எதைக் காட்டமுடியும் என்று என்னைக் கேட்கிறாய். நானும் பெருமிதத்துடன் இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? என்று கேட்டுக் களிப்படைகிறேன். தமிழகத்தில், முறையும்நெறியும் அறிந்து, அறநெறியில் அக்கறை காட்டி சிறந்ததோர் மக்கள் கட்சியாக வளர்ந்துவிட்டிருக்கிறது தி. மு. க. என்று உண்மையை உணர்ந்து உரைத்திடும் பண்பினர் கூறிடக் கேட்கிறேன்; எனினும் இதோ முதலமைச்சர் "தி. மு. க.வுக்கு எங்கும் பலம் இல்லை!" என்று ஒரே வரியிலே கூறிவிடுகிறார்.

எப்படி இந்த அபூர்வமான ஆராய்ச்சி நடத்தினார், நமக்கோ நாட்டுக்கோ, புரியாததோர் கண்டுபிடிப்பை அவர் எத்தகைய முறை மூலம் கண்டறிந்தார் என்று என்னைக் கேட்காதே தம்பி, அவர் முதலமைச்சர், ஆகவே கூறுகிறார்; தேர்தல் சூழ்நிலை உருவாகிறது—அதனால் கூறுகிறார் என்று மட்டும்தான் கூறலாம். வேறே அவருடைய அரிய

நாடகமாடலாம்!

(2)

முறை என்ன, தனிப்பட்ட திறமை யாது என்பனபற்றி எனக்கென்ன தெரியும்! கோயில்பட்டி வட்டாரத்திலே, வழக்கப்படி மின்னல்வேகச் சுற்றுப் பயணம் நடாத்தினர்; இடி முழக்கம் கேட்டனர், இன்மொழி மழை பொழிந்திருக்கும். பிரமுகர்கள் கூடி இருப்பர், பேழையுடையோர்குழைந்திருப்பர்; இவைகட்குப் பிறகு, முதலமைச்சர், 'இரத்தினச் சுருக்கமாக' "தி. மு. க.வுக்கு எங்கும் பலம் இல்லை" என்று கூறி இருக்கிறார்.

அவர் அவ்விதம் கூறுவதற்குக் காரணம் இருக்கிறது; ஒன்று அவர், அவருடைய கட்சிக்காரர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும் என்பது, மற்றொன்று நமது கழகத் தோழர்களுக்கு மனக்கசப்பு உண்டாக்க வேண்டும் என்பதாகும்; இதில் அவர், அவருடைய கட்சிக்காரர்களைப் பொறுத்த வரையிலே எதிர்பார்த்த பலனைப் பெற்றிருக்கக்கூடும்; நமது கழகத் தோழர்களைப் பொறுத்த வரையில் அவர் கசப்பூட்டும் நோக்குடன் பேசியது கேட்டு, நம்மில் யாரும் நாடி நரம்பு தளர்ந்துபோய் "ஐயகோ! நாம் ஏதோ பெரும் பலம் பெற்றுவிட்டோம் என்று பேசித் திரிகிறோமே தேர்தலில் ஈடுபடவும் திட்டமிட்டுவிட்டோமே, நமக்கு எங்கும் பலம் கிடையாதாமே, எல்லாவற்றையும் அறிந்தவர் என்று கூறத்தக்க நிலைக்கு உயர்ந்துள்ள காமராஜரே இதனைக் கண்டறிந்து கூறிவிட்டாரே! இனி என்ன செய்வது?" என்று கதறிக்கொண்டிருக்கப் போவதில்லை, செயலற்றுப் போய்விடவும் மாட்டோம். நமக்கு உள்ள பலம் நமது கொள்கையிலும், அதனை எடுத்துரைக்க நாம் மேற்கொள்ளும் முறையிலும், அந்த முறை பிறருக்கு வேண்டுமென்றே பெரும் பீதியும் அருவருப்பும் தரத்தக்கதாக இல்லாமல், பலரையும் அருகே ஈர்த்திடத்தக்கதான பண்புடையதாகவும் அமைந்திருப்பதையும் பொறுத்திருக்கிறது. இதனை நாம் செய்து

பணபலம் வேண்டாம்-மன பலமிருக்கையில்...

வருகிறோம் — செம்மையாகச் செய்து வருகிறோம் —நாளுக்கு நாள் நமது முறையிலும் திறத்திலும் முன்னேற்றமும் மக்களை நம் பக்கம் கொண்டு சேர்க்கும் தன்மையும் வளர்ந்து வருகிறது என்பதை எந்தக் கட்சியிலும் காணக்கிடைக்கும் ஏற்புடையோர் எடுத்தியம்புகின்றனர். நமக்குப் புரிகிறது! எனவேதான் காமராஜர், நமக்கு எங்கும் பலம் இல்லை என்று கூறுவது. பொருளற்றது என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, நாம் நமது பணியினைத் தொடர்ந்து நடத்துகிறோம்.

தி. மு. க. வுக்கு எங்கும் பலம் இல்லை—என்று கூறிடாமல், தி. மு. க .வுக்குப் பணம் இல்லை என்று காமராஜர் கூறியிருந்திருந்தால். பெருமூச்சுடன் ஆமய்யா, ஆம்! என்று நாம் ஒப்புக்கொள்வோம்!

ஆனால் காமராஜர் அகராதியில்—அரசியலுக்காகத் தயாரிக்கப்பட்ட தனி அகராதியில், பலம் என்பதற்குப் பணம் என்று பொருள் இருக்கும் போலும்!

பணத்தால் கிடைக்கக் கூடிய பலம் நமக்கு இல்லை என்பது உண்மை; அத்தகைய பலம் நமக்கு இல்லை என்று கூறிக்கொள்வதிலே நாம் வெட்கப்படத் தேவையுமில்லை!

இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருளைக் கொள்ளை அடிப்பவனைப்பிடித்துக்கொடுக்கும் போலீஸ்காரர், சம்பளம் எவ்வளவு பெறுகிறார்!

தேர்தலில் தித்திப்பு மொழி பேசிடும் எத்தர்களிடம் பொது மக்கள் சிக்கிச் சீரழியாதபடி பாதுகாக்கும் பணியாற்றக் கிளம்புகிறோம், நம்மிடம் இதற்குப் பெரும்பொருள் தேவையில்லை, உள்ளத்தில் தூய்மையும் கொள்கையில் உறுதியும், அக்கொள்கையைப் பரப்புவதற்கான முறையில் ஓர் பண்பும் இருந்தால் போதும்.

பணம், படைக்கலன் அல்ல என்று நான் கூறவில்லை தம்பி, படைக்கலன் அது ஒன்றுதான் என்று எண்ணுவது பேதைமை, பெரும்பிழை என்றுதான் கூறுகிறேன்.

பணம் படைத்தவர்கள் தேர்தலில் கையாளும் முறைக்கும், அது அற்றவர்கள் நாம் கையாளும் முறைக்கும் இந்தத் தேர்தலின்போது கடும் போட்டி இருக்கத்தான் போகிறது.

சென்ற கிழமை, அதுபற்றித்தான் குறிப்பிட்டேன், பணம் படைத்த காங்கிரஸ் கட்சி அள்ளிக்கொடுத்து. அம்புவிழி மாதரையும் கரும்பு மொழி ஆடவரையும் கலைத்துறையில் கண்டறிந்து பயன்படுத்தும், நாம் அந்தக் காரியத்தில் நாமே ஈடுபடவேண்டும், நாட்டு மக்களுக்கு நல்லறிவும் அரசியல் தெளிவும் தரத்தக்க நாடகமாடிடலாம் என்று குறிப்பிட்டேன்.

இது, அதற்கான ஆர்வம் உனக்கு ஏற்பட ஒரு தூண்டுகோல்; முழு நாடகமல்ல!!

பெரிய மனிதர்களின் போக்கு, அரசியல் பிரச்சினையில் எப்படி இருக்கிறது என்பதை மக்களுக்குக் காட்டிட ஒருவழி.

எந்த தனிப்பட்டவரையும் இழிவுபடுத்தும் நோக்கத்துக்காக அல்ல, அரசியலைப் பெரிய மனிதர்கள் என்போர் எவ்வளவு 'இலாவகமாக' உபயோகித்துப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதை விளக்கவே இது போன்ற நாடகங்கள். இனி நாடகத்தைப் படித்துப் பார், தம்பி......

பெரிய மனிதர்கள்....!

இடம்: கீரோடு இரயில்வே ஸ்டேஷன்

இருப்போர்: செட்டுக்காரர்
அவர் கணக்காளர்
பணியாட்கள்
போர்ட்டர் சின்னான்

காலம்: 1940

நிலைமை: கீவை மாவட்டத்தில் கீர்த்தி வாய்ந்த குடும்பத்தினரான, செட்டுக்காரர், சின்னையம்பதி செல்வதற்காக கீரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு வருகிறார்.

சில்க்குக் கோட்டும், ஜரிகை அங்கவஸ்திரமும், காதில் வைரக்கடுக்கனும் விரல்களில் வைர மோதிரங்களும் அணிந்து கொண்டு இருக்கிறார்.

கணக்காளர்; கவலையுடன் அவர் பின்னோடு வருகிறார். பளுவான பெட்டிகளையும், படுக்கையையும் தூக்கிக்கொண்டு பணியாட்கள் வருகிறார்கள்.

வெள்ளிக் கூஜாவும், பழக்கூடையும் எடுத்துக்கொண்டு, ஒரு பணிப்பெண் வருகிறாள்.

ரயில்வே ஸ்டேஷனில் வருவோரும், போவோரும், செட்டுக்காரரைக் கண்டு, மரியாதை காட்டுகிறார்கள். அவர்கள் போடும் கும்பிடுகளைக் கவனியாதவர் போல செட்டுக்காரர் இருக்கிறார்.

பெட்டி படுக்கையை, வண்டிக்குள்ளே எடுத்துவைக்க போர்ட்டர் சின்னான் வருகிறான்.

செட்டுக்காரருடன் பணியாள் வந்திருப்பதைப் பார்த்துவிட்டு, தனக்குப் பிழைப்பு இல்லை என்றெண்ணி வருத்தப்படுகிறான்.

புரோகிதர் புண்யகோடீஸ்வரர், மேல்மூச்சு வாங்கும் நிலையில் ஓடிவருகிறார்.

அவரைக் கண்ட, செட்டுக்காரர், சிரித்தபடி.........

செட்டுக்காரர்:- என்ன சாமி!

புண்யகோடீஸ்வரர்:- [பச்சைச் சிரிப்புக் காட்டியபடி...] என்ன கஷ்டகாலம் போங்கோ! தலைதெறிக்க ஓடிவரவேண்டி நேரிட்டுவிட்டது. பாழாப்போன ரயில் எங்கே கிளம்பிடறதோன்னு, பயம்...

[சொல்லிக்கொண்டே கையில் உள்ள சிறு பையைத் திறந்து, அதிலிருந்து, குங்குமப் பிரசாதத்தைத் தருகிறார்.

செட்டுக்காரர், பயபக்தியுடன் அதை நெற்றியில், அணிந்து கொண்டபடி...]

பகுவின் அலங்காரம் பலே ஜோர்!!

செட்:- இதுக்காகவா குடல் அறுந்துபோகிறபடி ஓடி வந்தீர். அடப்பாவமே! இன்னும் அரை மணி இருக்கே ரயில் புறப்பட......

புண்:- நேக்கு என்ன தெரியும்! ரயில் இந்நேரம், கீலம் போயிருக்கும்னு, அவ பயம் காட்டினு......

செட்:- யார் ஐயரே, உம்மைப் பயம் காட்டினவ...?

புண்:- நம்ம பாகு...!

செட்:- அவளை எங்கே பார்த்தீர்? வீட்டண்டே போயிருந்தீரா?

புண்:- என்ன, அப்படிக் கேட்டுவிட்டீர்? நான் எதுக்காக அவ வீட்டுக்குப்போகப்போறேன்? செட்டுக்காரர் கால் மறுபடியும் பட்டாலொழிய அவ, வீட்டு வாசப்படியை மிதிக்கப்படாதுன்னு சங்கல்பம் செய்துண்டு இருக்கேன்......நான் அவ ஆத்துக்குப்போவலெ......அவ வந்திருந்தா, அம்பா சன்னதிக்கு......நான் அர்ச்சனை செய்துண்டு, பிரசாதம்வாங்கிண்டிருந்தேன்.........தெரிஞ்சுண்டா. அவதான், சதா, உம்ம சங்கதியைச் சகலமும் விசாரிச்சுண்டு இருக்காளே! "என்ன ஸ்வாமீ! இங்கே இப்படி காலகரணம் செய்துண்டிருக்கீரே, இந்நேரம் செட்டுக்காரர் கீலம் போய்ச் சேர்ந்திருப்பாரேன்னு சொன்னு. பயந்தே போயிட்டேன். அங்கே பிடித்த ஓட்டம், இங்கே படி ஏறும்போது தான் நின்னுதுன்னு வையுங்கோ...

செட்டு:- அடபாவமே! என்னுலே, உமக்கு மெத்தச் சிரமம்...

புண்:- இது ஒரு பிரமாதமான சிரமமா......இன்னக்கி அலங்காரம் கண்ணைப்பறிச்சுட்டுது போங்க......

செட்:- அவளுக்கென்னய்யா மகாதளுக்குக்காரியாச்சே ....பதினெட்டு வயது குட்டி போலத்தான் இருப்பா......

புண்:- தாங்கள் யாரோட அலங்காரத்தைப் பத்திப் பேசறேள்?

செட்:- எல்லாம் அந்த பாகுவோட அலங்காரத்தைப் பத்தித்தான்......

புண்:- சிவ! சிவ! நான், அம்பாளோட அலங்காரத்தைச் சொன்னேன்.

செட்:- அடடே! நான் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டேன்...

புண்:- ஆனு, ஒருவகையிலே பார்த்தா பாகுவோட அலங்காரம் அம்பாளோடே போட்டி போடறது போலத்தான் இருந்ததுன்னு சொல்லணும்...

செட்:- போமய்யா, அவளைப்பத்தி நீர் எப்பவுமே இப்படித்தான் பிரமாதமாப் புகழ்ந்து பேசறது...

புண்:- கண் இருக்கு, பார்க்க, பொய்பேச மனசு கேட்கறதில்லே...உம்! கிரஹம் சரியாக இல்லாததாலே, அவளோடு மனஸ்தாபம் ஏற்பட்டதே தவிர, உமக்கு அவமேலே பிராணன் என்கிறது, நேக்குத் தெரியாதா?

[பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் போக்கில் இருக்கும் போர்ட்டரைப்பார்த்து]

செட்:- ஏண்டா, மரமாட்டமா நிற்கறே...சாமான்களை எடுத்து வண்டியிலே வையேன்......

[போர்ட்டர் மகிழ்ச்சியுடன், சாமான்களை எடுத்துவைத்துக் கொண்டிருக்கிறுன்]

புண்ய:- சின்னையம்பதியிலே எத்தனை நாள்?

செட்:- நாளை மறுநாள்தானே கவர்னர், டீபார்ட்டி. அது முடிந்ததும், புறப்படவேண்டியதுதான்.

புண்:- என்ன விசேஷம், டீபார்ட்டிக்கு......

செட்:- கவர்னரோட குதிரை, பந்தயத்திலே ஜெயித்தது, அதற்காக, சேட் தர்மசந் இந்த டீபார்ட்டி ஏற்பாடு செய்திருக்கான்......

புண்:- என்ன சொல்லுங்கோ...அவன், எத்தனை பெரிய சேட் நடத்தற டீபார்ட்டியாகவேணுமானு இருக்கட்டும், போன வருஷம், நடத்தினீர் பாரும், டீபார்ட்டி, அதைப்போல, இனி ஒருவனுலும் நடத்தவே முடியாது. அட அடா! ஊரே, பிரமாதம்! பிரமாதம்னு, பேசிண்டுது......

செட்:- டீபார்ட்டி, ரொம்ப அருமையாத்தான் இருந்தது ஆனு, திருஷ்டி பரிகாரம்போலே இந்த காங்கிரஸ் காரப் பயல்கள் கொஞ்சம் 'கலாட்டா' செய்து விட்டானுக......

புண்:- கவர்னர், ரொம்ப வருத்தப் பட்டாரோ...?

செட்:- அதெல்லாம் இல்லே...எல்லாம் வெளியூர்லே இருந்து கூலிகொடுத்துக் கொண்டுவந்தானுக, நம்ம ஊர்லே, எவனும் காலித்தனம் செய்ய மாட்டானுகன்னு சொன்னேன். திருப்தியாத்தான் பேசினுர்......ஆனு, நம்ம ஊர் பசங்களும், வரவர தலையரட்டலாயிட்டுதுங்க...

புண்:- சும்மா, வயித்துச் சோத்துக்கு வழி இல்லாததுகளெல்லாம் வந்தே மாதரம்னு வரட்டுக் கூச்சல் போடறதுகள் வேறே என்ன...?

[போர்ட்டர் பணிவாக]

போர்:- வந்தேமாதரம் சொல்கிறவங்க, வயித்துச் சோத்துக்கு வழியத்தவங்கன்னு சொல்லி விடலாமுங்களா? மகாத்மா காந்தி, ஜவர்லால் நேரு, இப்படிப்பட்டவங்க சோத்துக்கு வழி இல்லாதவங்களா......

[செட்டுக்காரர் கோபம் கொள்கிருர்.
கலெக்டர், வருவதைக் கண்டுவிட்டு
அவரை எதிர்கொண்டு அழைக்கிருர்.
கைகுலுக்கிக் கொள்கிருர்கள்.]

கலெக்டர்:- கீலமா......?

செட்:- இல்லே, சின்னையம்பதிக்குத் தான்......எப்படி இருக்குது ஊர் நிலைமை......என்னமோ சத்தியாக்கிரகம்...நின்னு தொலைஞ்சுதா......லீடர் வேஷம் போடற ஆளுகளைப் பிடிச்சு, அஞ்சு வருஷம், பத்து வருஷம்னு, ஒரு பத்துப்பேருக்குத் தீட்டி விட்டா, பயல்களெல்லாம், பெட்டிப் பாம்பாகிவிடுவானுக...

கலெக்:- ஆமாம்...ஆனு நிதானமா நடந்துகொள்ளச் சொல்றது கவர்மெண்டு......

பத்துப்பேரைச் சுட்டால், பாக்கிப்பேர்...

[வந்தேமாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! தேசபக்தன் திருமலைக்கு ஜே!]

என்ற கோஷம் கேட்கிறது.

எதிர்ப்பக்கமிருந்து, கிருச்சி வண்டி வந்து நிற்கிறது.

எல்லோரும், பரபரப்புடன் அங்கே ஓடுகிறார்கள்.

வண்டியிலிருந்து, திருமலை எனும் காங்கிரஸ் தொண்டன் இறங்குகிறான். மாலைகள் போட்டு, வரவேற்கிறார்கள்.

போர்ட்டர் சின்னான் ஒரு கதர் மாலை போடுகிறான்.

இதற்குள் போலீஸ் படை வருகிறது.

கலைந்து செல்லும்படி உத்தரவு இடுகிறது.

மக்கள் ஆர்வத்துடன் ஜெயகோஷமிடுகிறார்கள்.

போலீஸ் தடியடி நடத்துகிறது.

மக்கள் சிதறி ஓடுகிறார்கள்.

போர்ட்டர் சின்னானுக்கு நெற்றியில் இரத்தக் காயம் ஏற்படுகிறது.

மெள்ள தப்பித்துக்கொண்டு செட்டுக்காரர் இருக்கும் பக்கம் வருகிறான்.

கலெக்டர், விடைபெற்றுக்கொண்டு செல்கிறார்.

போர்ட்டர் நெற்றிக் காயத்தைக் கண்ட...]

புண்:- என்னடா இது, பாவிப் பயலே!

போர்ட்:- (சிரித்தபடி) ஏன் சாமி! அடித்தவனைப் பாவி என்கிறதா, அடிபட்டவனைப் பாவின்னு சொல்றதா......?

புண்:- வக்கணை கிடக்கட்டும்......நோக்கு என்னடா அங்கு வேலை......? அங்கேதான், அடித்து விரட்டறாளே, ஏன் அங்கே போகணும்னேன்...?

போர்:- என்னமோ, மனசு கேட்கலே, போனேன்; திருமலை, பாவம், மூணுமாசமாச்சி, ஜெயிலுக்குப் போயி, என் சினேகிதனோட மவன், ரொம்ப நல்ல பையன்......

செட்:- யாரு... அந்தத் திருட்டு விழி திருமலையா......? என்ன அவனுக்கு? ஜெயிலிலே இருந்து வெளியே விட்டாச்சா? சரி இனி ஊர்லே ஒரே ரகளைதான்... டே! நீ, போர்ட்டர் தானேடா? கூலிக்காரன் தானே! சாமானைத் தூக்கித்தானே பிழைக்க வேண்டியவன்......

போர்:- ஆமாங்க...வயித்துப் பிழைப்புக்கு எது செய்தா என்னங்க? அள்ளக் கூடாது திருடக் கூடாது...

செட்:- சீ! கழுதே! கூலிக்காரப் பயலுக்கு, அந்தக் கும்பலோட என்னடா வேலை......பெரிய லீடர் அந்தத் திருமலை...நீ போனயோ, அவனைத் தரிசனம் செய்ய......

புண்:- (அசட்டுச் சிரிப்புடன்) இதோ, தரிசனம் செய்துண்டு பிரசாதமும் வாங்கிண்டு வந்திருக்கான் பாருங்கோ......

செட்:- போட்டதே போட்டானுங்களே, பார்த்துச் சரியா மண்டையிலே போடப்படாதா...? எனக்கு மட்டும் ஒரு ஆறுமாதம் 'பவர்' கொடுத்தா, இந்தப் பயல்களிலே ஒரு பத்துப் பேரை, கடைத் தெருவிலே நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளுவேன், மத்தப் பயல்களெல்லாம், வாலை மடக்கிக்கொள்ளுவானுங்க.

போர்:- (சிறிது கோபமாக) என் கூலியைக் கொடுங்கய்யா......சுட்டுத் தள்ளுவதும் வெட்டிப் போடறதும் உங்க இஷ்டம்......கூலியைக்கொடுங்க...... போயி, ஏதாவது, தடவித் தொலைக்கணும், இந்தக் காயத்துக்கு......

செட்:- என்னடா ஒரு தினுசாகப்பேசறே—திமிரு பிடிச்சிருக்குதோ...கதர்ச்சட்டை போட்டதுமே இந்தக் கந்தப்பயல்களுக்குக் கண் மண் தெரியறதில்லை... எவனோ சொல்லி விட்டானாம் கதர் போட்டா போதும், வெள்ளைக்காரா ஓடிப்போவான்னு...

போர்:- வேண்டாமுங்க......மகாத்மாவைப் பத்தி இழிவாப் பேசாதிங்க...பாவமுங்க...

புண்:- டே! பாவ புண்யத்தைப்பத்தி நோக்கு என்னடா தெரியும், மண்டு! கூலி வேலை செய்து பிழைக்கிற உனக்கெல்லாம் ஏன் இந்தக் காரியம்னு அவர் சொன்னாரே தவிர, மகாத்மாவையா இழிவாப் பேசறார்?

செட்:- (கோபமாக) என்ன ஐயரே? அந்தப் பயகிட்ட என்னமோ விளக்கம், சமாதானம் பேசறீர்! ஏ! ஏலே, டே! இதோ, இப்படிப் பாருடா! மகாத்மாவைக் கூடத்தான் கேவலமாய்ப்பேசறேன் என்ன செய்துவிடப் போறிங்க...? தலையைச் சீவிவிடுவிங்களா...? வெடி குண்டு கொண்டு வந்து என் மோட்டார் மேலே போடுவிங்களா வெட்டிப் பசங்களா! வெள்ளைக்காரனை ஓட்டிடப் போறிங்க இல்லே, வீரப்புலிக! துப்பாக்கியைத் தூக்கினா, காததூரம் ஓடிப்போறிங்க, வாய் மட்டும் இருக்கு வந்தேமாதரக் கூச்சல்போட. சுயராஜ்யம் வரப் போகுது இல்லே. உங்களோட கூச்சல் கேட்டு? அறிவு கெட்ட பயலுக! அவன் வந்து தானேடா இந்த நாட்டுக்கே யோகம் பிறந்தது...அவனிடம் போய், வாலாட்னா, ஒட்ட நறுக்கி...

போர்:- வெள்ளைக்காரன் கூட இப்படிப் பேசமாட்டான் போலிருக்குதுகளே! அவனே கூட, இது உங்களோட தேசம்தான். நான் அந்நியன் தான். போகத்தான் போறேன், ஆனா கொஞ்சம் பொறுத்துப் போறேன்னுதான் சொல்றானாம், நீங்க ஒரே அடியா எங்களை முட்டாளுக, காலிப் பசங்க, என்றெல்லாம் ஏசிப்பேசறிங்க...ஏனுங்க, வீணா ஊரெல்லாம் ஒருவழியாப்போனா, நீங்க நேர்மாறாப் போகணும்...

[செட்டுக்காரர் கோபமாக போர்ட்டரின் கன்னத்தில் அறைந்துவிடுகிறார்.

இரயில் புறப்படுகிறது. செட்டுக்காரர் ஏறிக்கொண்டு ஒரு நாலணா சில்லறையை வீசு

பெரிய மனுஷா அப்படித்தான்

கிருர், அதைப் பொறுக்கி எடுக்கவும் மன மின்றி, கண்கலங்கி நிற்கிருன் போர்ட்டர். பணிப்பெண் சில்லறையைப் பொறுக்கி எடுத்து, போர்ட்டரிடம் கொடுத்து விட்டு......]

பணி:- உனக்கேன் அண்ணேன், அவரோட விரோதம் ...அவரோட சுபாவம் அறியாமப்படிக்குப் பேசி, வீணு தொல்லையைத் தேடிகிட்டயே...

புரோ:- ஏண்டி குட்டி! இவன் எல்லோரிடமும் பேச றது போலே அவரோடு பேசலாமோ! ஒரு பெரிய மனுஷன், சர்க்கார் கட்சின்னு தெரிஞ்ச பிறகு, அவனண்டை எப்படி நடந்துக் கொள்ளணுமோ அப்படின்ணு நடந்து கொள்ளணும்.

பணி:- அண்ணனுக்குத் தெரியுமா உங்களுக்குத் தெரிஞ்ச நெளிவு சுளிவெல்லாம்...அது பாவம், மனசுலே பட்டதை பட்டுப் பட்டுன்னு பேசிடுது...

புரோ:- செட்டுக்காரர், ராவ்பகதூர் வரும்னு பிளான் போட்டு வேலை செய்துண்டு இருக்கார்; இப்ப போறதுகூட கவர்னர் டீ பார்ட்டிக்குத்தான்; அவர் எதிரே வெள்ளைக்காரன் ஒழியணும்னு பேசினு கேட்டுண்டு இருப்பாரோ! கலெக்டரும் கவர்னரும், பொதுவா சர்க்காரே, அவருக்கு வேண்டியவா...

போர்:- இருக்கட்டுமே—அதனுலே...நம்ம நாட்டிலே அந்நியன் ஆளக்கூடாதுன்னு கேட்கக் கூடாதா, கேட்காதவன் மனுஷ ஜென்மந்தானு! என்னமோ, பட்டம் பதவி, ஒரு பத்துப் பேருக்கு வீசிப் போட்டு விட்டா போதுமா, மக்களெல்லாம் பஞ்சத்திலே அடிபட்டுப் தேஞ்சிப் போருங்க, மாண்டு போருங்க...

புரோ:- அதுக்கு, இவரை என்னடா செய்யச் சொல்றே ......?

போர்:- இவரை என்ன செய்யச் சொன்னுங்க! என்ன செய்யத் தெரியும் இவருக்கு? என்னுட்டம் இளைச் சவன், ஏழை அகப்பட்டா, அடித்து கொடுமை செய்யத் தெரியும்...ஏனய்யா, செய்யமாட்டாரு... பக்கமேளம் அடிக்கத்தான் நீங்க இருக்கறிங்களே...

பணி:- ஏன்யா, ஐயர்சாமி! ஐயாவுக்கு ஏத்தபடி பேசி, சுயராஜ்யமாவது கத்தரிக்காயாவதுன்னு சொல்லி விட்டு இந்த அண்ணன், கதர் போடுது காலித் தனம் செய்யுதுன்னு சொல்ருரு, நீயும் கூடச் சேர்ந்துகிட்டு ஆமாமாம்னு சொல்றயே உன் மகன், காந்தி தொப்பி போட்டுகிட்டு, கொடி தூக்கிகிட்டு கடைத் தெருவிலே பாடிக்கிட்டுப் போவுது, ஊர்கோலத்திலே...என்ன, செய்தே... ஏசினயா...?

புரோ:- சரி, வாயை மூடித் தொலை எவன் காதிலாவது விழப் போறது...நான் என்ன, சுயராஜ்யம் வேண் டாம்; மகாத்மாவை மதிக்கப்படாது; கதர் கட்டப் படாது; என்றெல்லாம் துஷ்பிரசாரமா செய்ய றேன். இதெல்லாம் விஷம்னு கருதிண்டு, இந்த விஷயத்திலே ஈடுபட்டவாளை விரோதின்னு எண் ணிண்டு இருக்கார் செட்டுக்கார்—அவரோட அந்தஸ்த்து, ஐஸ்வரியம், செல்வாக்கு, இதெல் லாம் சாமான்யமோ! அப்படிப்பட்டவரோட விரோ தத்தைத் தேடிண்டு கெட்டுப் போகலாமோ... எம்பவும் சர்க்காரை எதிர்க்கிறவாளைக் கண்டா, பெரிய மனுஷாளுக்குப் பிடிக்காது. பெரிய மனுஷா அப்படித்தான்...

பணி:- அது நெசம்தான்—பெரிய மனுஷனுங்க அப் படித்தான், அவங்க கிட்டெ இளிச்சி இளிச்சிப் பேசறவங்களுக்குத்தான், கேட்டது கிடைக்குது ...அண்ணேன், ஐயர் ரொம்ப ரொம்பக் கெட்டிக் காரரு! எங்க செட்டுக்காரரை பாகு இருக்காளே, அடே அப்பா மகா தளுக்குகாரி, அவளாலேயே கூடச் சரிப்படுத்த முடியறதில்லே......சண்டை போட்டுக்கருரு...ஐயர் தெரியுமா, செட்டுக்கார ரைச் சொக்குப்பொடிபோட்டு வைச்சிருக்காரு... சரியண்ணேன்! ஏன் இப்படி திகைத்து நிற்கிறே? பெரிய மனுஷனுங்க, அப்படித்தான்.

போர்:- ஆமாம் குழந்தை! திருமலைகூடச் சொல்லி யிருக்கான், பெரிய மனுஷனுங்க இப்படித்தான், சர்க்கார் தாசனுங்களாத்தான் இருப்பாங்க. கொள்கை, குணம், எதுவும் இருக்காது. என்ன செய்தா என்ன இலாபம் கிடைக்கும் என்கிறதிலே தான் குறி இருக்கும்னு...

[கவலையுடன் செல்கிருன்]

புரோ:- உலகம் போற போக்கு தெரியாத பய...பெரிய மனுஷாளோட பகையைத் தேடிண்டா நல்லதா?

பணி:- யார் சொல்லுவாங்க அப்படி! சாமி, நீ, ஒரு பள்ளிக்கூடமே வைச்சி நடத்தலாம்......

புண்:- (கொஞ்சும் பாவனையில்) போக்கிரி! என்ன, கேலி செய்யறே...

பணி:- ஆளுக்குத் தகுந்தபடி பேசறது, வேலைக்கு ஏத்தபடி நடக்கறது, சமயத்துக்குத் தகுந்தபடி வேஷம் போடறது, இந்த வித்தையைக் கத்துக் குடுக்க ஒரு பள்ளிக்கூடமே நடத்தலாம் போ...

புண்:- இரு, இரு...உன்னை வந்து...(கொஞ்சம் பார்வை செலுத்துகிருர்)

பணி:- (கேலியாக) ஐய்யே...வாலிபம்திரும்புது..அழகு சொட்டுது...அட என்னயா, இப்படி ஆடு திருடின வன்போல விழிக்கறே...அதுக்கு வேறே ஆளைப் பாரு...

[போகிருள்]

[திரையில்]

1940

1941

1942

1943

என்று ஆண்டுகள் ஓடுவதைக் காட்டிவிட்டு 1953-க்கு வந்து சேருவதாக விளக்கமளித் துப் பின்னர், புதிய காட்சி]

இடம் கீரோடு ரயில்வே ஸ்டேஷன்.

இருப்போர்:- செட்டுக்காரர்
பணியாள்

கதர் பொருந்தலே, கழகம் பொருந்துது!

புரோகிதர்

போர்ட்டர்

பணிப்பெண்

நிலைமை:- [செட்டுக்காரர், துல்லிய கதருடை அணிந்து கொண்டிருக்கிறார்.

வைரம், வழக்கம்போல் மின்னுகிறது.

பெட்டி, படுக்கையைப் பணியாளிடமிருந்து வாங்கி வண்டியில் வைக்கிறான், போர்ட்டர் சின்னான்.

சின்னான் வயது முதிர்ந்ததுடன் வறுமையில் அடிபடுவது தோற்றத்தில் தெரிகிறது.

பணிப்பெண், வயது ஏறிய போதிலும், வசீகரம் இழக்காத தோற்றதுடனும், தைரியம் கொண்ட போக்கிலும் தென்படுகிறாள்.

புண்யகோடீஸ்வரர் வயோதிகம் மேலிட்டிருப்பதுடன் முன்பு இருந்ததைவிட அதிக வைதீகக் கோலத்துடன் காணப்படுகிறார்.

ரயில்வே ஸ்டேஷனில் போகிறவர், வருகிறவர்களை செட்டுக்காரர், புன்னகை காட்டி, சொந்தம் கொண்டாடுகிறார்.]

புண்:- போகிற காரியம் ஜெயமாகணும்னு, அம்பாளுக்கு அர்ச்சனை செய்துண்டுதான் வந்திருக்கேன், அவ கைவிடமாட்டா, இந்தாருங்கோ...

[குங்குமப் பிரசாதம் தருகிறார். பயபக்தியுடன் நெற்றியில் வைத்துக்கொண்டு]

செட்:- போன மாதம் மகாநாடு நல்ல முறையிலே நடந்ததற்கு நான்தான் காரணம் என்பது முதல் மந்திரிக்குத் தெரியும் இல்லையா...

புண்:- ஆமாம்...நம்ம பிச்சு சொன்னான்...இந்தப்பக்கத்திலேயே செட்டுக்காரர்போல தங்கமான ஆசாமியை நான் பார்த்ததே இல்லைன்னு சொன்னாராம்...

செட்:- யார்? முதல் மந்திரியா? அப்படியா? பிச்சு கேட்டுக் கொண்டிருந்தானாமா...?

புண்:- கேட்டுண்டு சும்மா இருப்பானா! அவன் பாட்டுக்கு இதுதான் சமயம்னு, செட்டுக்காரர், மஹாஒருதர்மிஷ்டர், பெரிய உபகாரி, இந்தப் பக்கத்துக்கு அவர் ராஜா மாதிரி, அவரோட செல்வாக்கு வேறு ஒருவருக்கும் கிடையாது, அப்படி இப்படின்னு வெளுத்து வாங்கி இருக்கான்...

செட்:- பிச்சுமணிக்குச் சொல்லியா தரவேணும்...

புரோ:- அதனாலேதான், முதல் மந்திரி அவன் காதோடு காதாக, இரகசியமாகச் சொன்னாராம், இப்படிப்பட்டவங்க மந்திரியாகணும்னு...

செட்:- [வெட்கப்படுவது போலாகி] போய்யா...அவர் அப்படிச் சொல்லி இருப்பாரா...மந்திரி வேலைக்கு நானுன்னா சொல்லி இருப்பாரு...நான் இன்னும் சரியா அவருக்குப் பழக்கம்கூட ஆகல்லே...

புண்:- அதென்ன அப்படிச் சொல்றீர். பழக்கம்னா என்ன, வருஷக் கணக்கா பழகவேணுமா...?

செட்:- அதல்லய்யா...மந்திரி வேலைன்னா, அது ஜெயிலுக்குப் போன பெரிய தலைவர்களுக்கு, தியாகம் செய்தவாளுக்குன்னுதானே சொல்லுவாங்க...... நான், இப்பத்தானே காங்கிரசு...நம்மைப் போயி மந்திரியாக்கணும்னா...

புண்:- சரியாப் போச்சுப் போங்க! ஜெயிலுக்குப் போனாத்தானா? மத்தவாளெல்லாம், தேசத்துக்குப் பாடுபடலேன்னு அர்த்தமோ! மந்திரி வேலையை வகிக்கறதுன்னா கீர்த்தி, செல்வம், செல்வாக்கு அந்தஸ்த்து, கெம்பீரம், ராஜகளை, இலட்சணம், இதெல்லாம் வேணுமா, தடியடி பட்டேன், ஜெயிலுக்குப் போனேன, இது போதாதான்னா கேட்கறதா...?

[போர்ட்டர் சின்னான் கூலிக்காக வந்து நிற்கிறான்.]

இதோ, இந்த சின்னான் கூடத்தான் தடியடி பட்டவன், இவனை ரயில்வே மந்திரியாக்க வேணாமோ, உம்மோட வாதப்படி பார்த்தா.

செட்:- போர்ட்டர்! என்ன ஊர்லே காங்கிரஸ் எப்படி இருக்கு...அடே! என்ன இது கதர்ச் சட்டை காணோம்...

சின்னான்:- கதர்ச் சட்டைங்களா ... இல்லிங்க...அது நம்ம உடம்பிலே பொருந்தலிங்க...

செட்:- கட்சி மாறிவிட்டயா......காங்கிரஸ் காங்கிரஸ்ன்னு தலைமேலே தூக்கி வைத்துக்கொண்டு ஆடுவயே, முன்னை எல்லாம், இப்ப என்ன இப்படி கெட்டுப் போயிட்டே...

போர்:- நான் கெட்டுப் போகலிங்களே, காங்கிரஸ் கட்சிதான், எங்களை விட்டுவிட்டுப் போயிடிச்சி...

செட்டு:- உன் வாயாடிக் குணம் மட்டும், மாறமாட்டேங்குது...இப்ப என்ன நீ, கழகமாயிட்டயா?...

போர்:- கழகம், எங்களவங்களுது ஆயிட்டுதுங்க...

புண்:- என்னடா, இப்படி ஏட்டிக்குப் போட்டியாப் பேசிண்டிருக்கே, இப்ப, நம்ம எஜமானரு, காங்கிரசாயிட்டார், தெரியுமோன்னோ...

போர்:- தெரியுமுங்க...

புண்:- முன்னே அவருக்குக் காங்கிரஸ் பக்தி வேணும்னு சொன்னவனாச்சே நீ, இப்ப நீயே காங்கிரசை விட்டுப் போயிட்டேன்கிறயே...என்னடா காரணம்?

போர்:- காரணம் என்னங்க? 'எஜமானரு' காங்கிரசாயிட்டாருன்னு நீங்களே சொல்லிவிட்டிங்களே, போதாதுங்களா! காங்கிரசும் 'எஜமானருங்க கட்சியாயிட்டுது; நாங்க ஏழை பாழைங்க, ஏனுங்க இனி, இந்தக் காங்கிரசுக்கு...

செட்:- (கோபமாக) ஓஹோ! மண்டைக் கர்வம் பிடிச்சாச்சு ப'லுக்கு காங்கிரசை ஒழிச்சிடப் போறயோ ...ஏண்டா! கழகம்! நீ, எதிர்த்தாச்சு, இனிக் காங்கிரஸ் தலை எடுக்காது, ஏண்டாப்பா, அது தானே உன்னோட எண்ணம்.

சர்க்கார் கட்சியில் சார்வதைக் காணுக!

புண்:- கிடக்கிறான். விட்டுத் தள்ளுங்கோ, கழகம்னு எப்ப ஆச்சோ, அப்ப இவன், மட்டு மரியாதையா நடக்கமாட்டான் ஏதாவது துடுக்குத்தனமாப் பேசுவான்.

செட்:- பேசுவான்...பேசுவான் ... இழுத்துக்கொண்டு போய், செம்மையா உதை கொடுக்கச் சொன்னா, என்ன செய்வானும்! வயித்துச் சோத்துக்கு வக்கு இல்லை, மூட்டை சுமந்து பிழைக்கவேணும், இதுகள், அரசியலிலே புரட்சி செய்யப் போவுதாம், காங்கிரசைக் கவிழ்த்துவிடப் போறானுங்களாம்...அகில உலகமே நடுநடுங்குது நேரு பேர் கேட்டா...

போர்:- (குத்தலாக) அது உண்மைதானுங்க...அகில உலகம் என்னங்க, எங்களுக்கேகூட பயம்தானுங்க, நேரு பேர் கேட்டாலே...மனுஷன் என்னெல்லாம் சொன்னாரு, ஏழை எளியவங்க சார்பா, இப்ப, மாட்டிகிட்டி முழிக்கிறாரு, முதலாளிங்க கிட்ட...

செட்:- டே! வாயை மூடமாட்டே...மரியாதையா நடந்துக்கோ, தெரியுதா...

போர்:- மந்திரி வேலை இப்பவே வந்த மாதிரியாத்தான் இருக்கு, ஐயா, பேசறது பார்த்தா...

[திருமலை வாழ்க!

திராவிடநாடு திராவிடருக்கே!

சிறைக்கஞ்சா சிங்கம் திருமலை வாழ்க!

என்ற முழக்கம் கேட்கிறது,

கிருச்சி வண்டியை நோக்கிப் பலர், ஆர்வத்தோடு செல்கிறார்கள்.

போர்:- யாருன்னு பார்க்கறிங்களா...திருமலைதான்...... நம்ம திருமலையேதான்......முன்னாலே காங்கிரஸ் தொண்டனாக இருந்து ஜெயிலுக்குப் போனானே... இதோ, என் நெற்றியைப் பார்த்தா தெரியுமே... அவனேதான், கல்லக்குடி கிளர்ச்சியிலே ஜெயிலுக்குப் போய்த் திரும்பி வருகிறான்...

செட்:- அவனும் இப்ப காங்கிரசிலே இல்லையா...?

போர்:- இடம் கிடையாதுங்களே! ஏழை பாழை, தியாகம் செய்தவன், அடிபட்டவன் உதைபட்டவன், ஜெயிலுக்குப் போனவன், சீரழிந்தவன், இவங்களுக்கெல்லாம், இப்ப, ஏதுங்க காங்கிரசிலே இடம்!! அதான் நீங்களெல்லாம், கொலு இருக்கறிங்களே...

புண்:- கோபமூட்டி, வம்புக்கு இழுக்கிறதுன்னே, தீர்மானிச்சுண்டு பேசறியா...

செட்டி:- பேசட்டும், சாமி, பேசட்டும் வேறென்ன தெரியும் இதுகளுக்கு, கத்து கத்துன்னு கத்தத் தெரியும், பாருங்களேன் அதுங்க போடற கூச்சலை ஏண்டாப்பா, கல்லக்குடி கிடைச்சுடுச்சா, உங்க திருமலை ஜெயிலுக்குப் போய் வந்ததும்...

போர்:- கல்லக்குடி இன்னும் கிடைக்கல்லிங்க. ஆனா மானத்தைப் பத்தின அக்கறை எங்களுக்கு இருக்குதுன்னு, ஊர் உலகம் தெரிஞ்சுகிட்டுதுங்க. எங்கேயோ இருந்துவந்த வடநாட்டுக் கொள்ளைக்காரர் பேராலே இங்கே ஊர் இருக்கறது அவமானம் என்கிறதை எல்லோருமே தெரிந்து கொண்டாச்சிங்க...

[போலீஸ்! போலீஸ்!

என்று புண்யகோடிஸ்வரர் கூக்குரலிடுகிறார்.

போலீஸ் வருகிறது செட்டுக்காரரைப் பார்த்துச் சலாம் வைக்கிறார்கள்.]

செட்:- இந்தப் பய, கழகமாம்...காலித்தனம் செய்கிறான்.

[போலீஸ், போர்ட்டரை இழுத்துச் செல்கிறது.

இரயில் புறப்படுகிறது. செட்டுக்காரரும் புரோகிதரும் வண்டியில் ஏறி அமருகிறார்கள்.

வண்டி சென்ற பிறகு.]

போலீஸ்:- சரி, போய்யா...பெரிய மனுஷனுங்ககிட்ட ஏன்யா, வம்பு...அவனுங்க பேச்சுன்னாதான் இப்ப காங்கிரஸ் வேதமா எடுத்துக்கிட்டு, உத்தரவு போடுதே—காலம் போற போக்கு தெரியாமே...

போர்:- பெரிய மனுஷனுங்க அப்படித்தான், அண்ணேன் அப்படித்தான்! முன்னே காங்கிரஸ் இருட்டிலே உலவினபோது, கண்டபடி ஏசிகிட்டு, வெள்ளைக்காரன் காலைக் கட்டிப் பிடிச்சுகிட்டு கிடந்தானுங்க, இப்ப காங்கிரசு துரைத்தனம் பண்ண ஆரம்பிச்சதும், அதைக் கட்டி பிடிச்சுகிட்டு கொட்டமடிக்கிறாங்க...

போலீஸ்:- அதுக்கென்ன செய்யறது......பெரியமனுஷனுங்க அப்படித்தான்...எப்பவும் சர்க்கார் பக்கமாத்தான் இருப்பானுங்க...

போர்:- அவங்களை நான் குறை சொல்லலே, அண்ணேன்! இரத்தம் கொட்டி, கண்ணுக்குக் கண்ணா மதிச்சித் திருமலை போன்றவங்க உழைச்சி வளர்த்தது காங்கிரசு. அது இப்ப ஊரை அடிச்சி உலையிலே போடறவங்க பக்கம் சேர்ந்துகிட்டு, திருமலை போன்றவங்களை, தேளாக் கொட்டுது...

போலீஸ்:- சரி! சரி! போ! போ!

பணிப் பெண்:- அண்ணேன் இந்த மட்டோடு போச்சேன்னு சந்தோஷப்படு. இப்ப எங்க எஜமானருக்கு கெவர்மெண்டிலே, எப்பவும் இல்லாத அளவு செல்வாக்கு. கலெக்டருக்கு ஒரு கால் காகிதம் கொடுத்தனுப்பிச்சா, பறந்துகிட்டு வாராரு... உன் மனசோட போட்டு வைய்யி, மந்திரிவேலை வரப்போவுது இவருக்கு......

போர்:- அது சரிம்மா, அது ...சரி, பணத்தைக் கொட்டறாரு இல்லையா, இப்ப காங்கிரசுக்கு, அதனாலே...

பணி:- நீ ஒரு பைத்யம்......பெரிய மனுஷனுங்க, பணம் செலவு செய்தா, ஒண்ணுக்குப் பத்தா திரும்பி வரும்னு உறுதியாத் தெரிஞ்சாத்தான் செய்யறானுக. பத்து வருஷத்துக்கு முன்னே, எஜமானர் பட்ட கடனெல்லாம், இப்ப தீர்ந்து போச்சி, இப்ப

(13-ம் பக்கம் பார்க்க)

சித்திரையே, சித்திரையே!

13.4-69

சித்திரையே! சித்திரையே செழிப்பைத் தந்து
சிங்காரத் தமிழாட்சி சிறப்பைச் சேர்ப்பாய்!
முத்தமிழே! முத்தமிழே! முல்லைப் பூவாய்
மொட்டவிழ்ந்து நலமென்னும் மணத்தைத் தாராய்!

சௌமியனும் தமிழர்களின் தலைவன் அண்ணா
சகலசுகம் தந்ததுபோல் நீயும் தந்து
யௌவனமாய்ப் பொலிகின்ற கைக ளாலே
யாழெடுத்து வளமையெனும் இசையை மீட்டு!

தாம்போன வழியென்று நெஞ்சம் போகும்
தாழ்வான வழியொன்றைத் தந்தி டாமல்,
வேம்பான கொள்கைகள் வெல்லம் போன்று
வீற்றிருக்க என்றென்றும் வன்மை தாராய்!

அள்ளுகின்ற இன்பங்கள் அனைவ ருக்கும்
ஆக்கத்தைக் கொடுக்கட்டும்; நித்த நித்தம்
கொள்ளுகின்ற கருத்துக்கள் குவல யத்தில்
கூட்டட்டும் அறிவோடு அன்பைச் சேர்த்து!

பூவினிக்கத் தேனுண்டு; தமிழர்க் கெல்லாம்
புவனிபுகழ்ப் பேச்சாளன் அண்ணா வைப்போல்
நாவினிக்க நற்கருத்தாய்த் தாங்கிக் கொண்டு
நற்றமிழர் வாழ்வுக்கு நன்மை தாராய்!

தமிழ்மாட்சி பெற்றுள்ள தன்மை கண்டு
தரணியிலே தமிழர்களின் பெருமை கூறத்
தமிழ்ஆட்சி நிலைநிற்கச் சௌமிய ஆண்டே!
சந்ததமும் தமிழர்க்குச் சிறப்பைக் கூட்டு!

—கு. பிரான்சிஸ்

வருணாசிரமம்-புதிய பதிப்பு

[மா. கி. த.]

இது இருபதாம் நூற்றாண்டு! ஆம்! உண்மைதான்!! நம்மை நாமே நம்பச் செய்துகொள்ள வேண்டியதாகிறது — நாட்டு நடப்பு சில வேளைகளில் அப்படி இருக்கிறது!

பூமி உருண்டை அல்ல; தட்டை தான்! பூமி சூரியனைச் சுற்றவில்லை; சூரியன்தான் பூமியைச் சுற்றுகிறது! சூரியனை பாம்பு விழுங்குகிறது; மீண்டும் கக்குகிறது! இப்படிப் பல! எத்தனையோ! எண்ணற்ற கருத்துக்கள் — காலத்தின் மடியில் மடிந்து சருகாகிக் காற்றிலே கலந்து கரைந்துவிட்டவை. ஆனால் இவற்றிற்கெல்லாம் இன்று உயிர் வந்துவிடுமோ என்று அஞ்சத்தக்க நிலை; எங்கும் இல்லை என்றாலும் இங்கும் அங்குமாகச் சில நேரங்களில் தோன்றிடுகிறது. உடலில் நோய்க்குறி இருந்தது. மருத்துவர் மருந்திட்டார். நோய் நீங்கிவிட்டது என்றிருந்தோம். பத்தியத்தைக்கூட கொஞ்சம் கைவிட்டோம். இவ்வளவு கடும் பத்தியம் ஏன் என்றிருந்தோம். நாளாகியதும் நோய்க் கிருமிகள் மீண்டும் தலை காட்டிட்டால் எப்படி இருந்திடும் நிலை? அது போன்ற ஒரு நிலை இன்று நாட்டிலே உருவாகிவிட்டிருக்கிறது. சனாதனம் வருணாசிரமம் இவை பற்றிப் பேசுவோர்—உண்மை நிலை யுரைப்போர் குறைந்துவிட்டனர். ஏன், இல்லை என்றே சொல்லிடலாம். வாட்டிடும் வறுமை தீய்த்திடும் பசி, வேலையின்மை எனும் வேதனை என்று இப்படிப் பல இருந்திடும் காரணத்தினால் ஆண்டவன் படைப்பில் அநீதியா, அடுக்குமா இந்த அக்ரமம்—முகத்தில் ஒருவர் தொடையில் மற்றொருவர்—தோன்றிட முடியுமோ இப்படி—கற்பனை எனினும் அதற்கும் அளவு இல்லையோ—அக்ரமம் அல்லவோ இது என்று நாளும் பேசி வந்தோர் குறைந்தனர். பகுத்தறிவுப் பாசறையின் பாதை வேறு திக்கு நோக்கித் திரும்பியது, பத்தியம் எற்றுக்கு இனியும் என்று இருந்திட்ட நிலையில் பழைய நோயின் குறிகள் உடலின் பகுதிகளில் இருக்கிறேன் நான் என்று எழுந்திடுதல் போல் இன்று ஜாதி இயற்கைதான் —அது இருந்தே தீரவேண்டும் என்று ஈனக் குரல் ஒன்றிரண்டு கேட்கிறது.

ஆண்டவன் படைப்பில் யாவரும் சமமே என்பது மாறி ஆண்டவன் படைப்பில் ஆளுக்கு ஆள் வேற்றுமை உண்டு என்று கூறிடும் துணிவு தோன்றிடுகிறது சிலர்க்கு. உடைமைக்கு உரியவன் கேளாது விட்டால் எவனெவனோ என்னது உன்னது என்று மார்தட்டுவான் என்பது உண்மையாகிறது.

அரசியல் அமைப்பில் கூறப்பட்டு விட்டது. நாகரிக உலகம் ஏற்றுக் கொண்டு விட்டது. உண்மை அதுவே என்பதனை உலகம் உணர்ந்து நீண்ட நெடுநாட்களாகி விட்டன! மக்கள் நிகர்! பிறப்பு ஒக்கும் எல்லா வுயிர்க்கும்! ஒருவனை, ஒருவன் தொடேன் தீண்டேன் என்பது பாவம் மட்டும் அன்று குற்றமும் ஆகும் என்று இன்று எல்லோரும் உணர்கின்றனர். ஆனால் தீண்டாமை நியாயம்தான்; இருத்தலால் தப்பேதும் இல்லை— என்று கூறிடும் துணிவு ஒருவர்க்கு இருந்திடுகிறது என்றால், அதுவும், இன்று, இந்நாளில் இருந்திடுகிறது என்றால், நாம் இருபதாம் நூற்றாண்டில் இருக்கிறோம் என்பதை சொல்லித்தானே நம்ப வேண்டியதாகிறது! நோயால் நொடியால் தவிப்போனிடம் நெருங்கிச் சென்று அவனைத் தொட்டுத் தீண்டவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவனைத் தொட்டுத் தீண்டி மருத்துவம் பார்த்துத் தொண்டு செய்யப் பலர் உளர். அது அவர்கள் கடமை, ஆனால் வேறு காரணம் ஏதும் இல்லை—அவன் பிறந்த குலம் மட்டுமே காரணம் நான் அவனைத் தொடேன் தீண்டேன், தொட்டுத் தீண்டினால் தலை முழுகுவேன் என்றால் அது அக்ரமம் அல்லவோ? அந்த அக்ரமம் வேண்டும் என்கிறார் ஒருவர்! சரிதான் உலகம் தெரியாத ஆள்போலும் அவர் என்பீர்! அல்ல —அல்ல! உலகம் தெரிந்த ஆள் தான்! உயர்ந்த ஆள் என்றும் பாராட்டப்படும் ஆள்தான்!! காலமெல்லாம் தூங்கிக் கழித்து எழுந்து வந்த ரிப்வேன் விங்கிள் அல்ல அவர்! நாம் வாழும் காலத்தில் வாழுகின்றவர்தான்!

சங்கராச்சாரியார்—பூரியார்! பூரி சங்கராச்சாரியார்தான்! தீண்டாமை இருந்திட வேண்டுமாம்! அது தனி மனிதன் உரிமையாம்! அதில் அரசு தலையிடக் கூடாதாம்! அவர் வாதம் இவை! வேடிக்கையாக இல்லை? என் மனைவிதானே நான் கொல்லுவேன் என் உயிர்தானே நான் போக்கிக் கொள்ளுவேன் — அது என் உரிமை என்பாரோ அவர்? மறந்தேனே அவர்க்கு மனைவி ஏது? இருந்தால் கொல்ல உரிமை கேட்பாரோ?

எது உரிமை—எதுவரை உரிமை என்று எல்லை ஏதும் கிடையாதா? தெரியாதா அவருக்கு? தெரியும்— புரியும்!! ஆனாலும் வருணாசிரமம்— புதிய பதிப்பு இது! இருபதாம் நூற்றாண்டின் இணையிலாப் பதிப்பு! அதனால் தனி மனிதன் உரிமை என்று பேசுகிறது! வேடிக்கை அல்ல இது வேதனையான நிலை! புண் ஆறவில்லை, புறையோடியிருக்கிறது என்று காட்டுகிறது அவ்வளவுதான்!

நந்தனைத் தீயிலிட்டுப் பொசுக்கியும் திருப்தியுறாத சனாதனப் பாம்பு படம் எடுத்தாடுகிறது, புதிய உருவில்! பாம்புக்குப் பல் மீண்டும் மீண்டும் முளைக்குமாம், விஞ்ஞானம் சொல்கிறது!

காந்தி, அடிகள் ஆனது தீண்டாமை என்னும் தீமையைக் கண்டித்ததினால்—கதைகள் பல இருந்திடுகின்றன புராணங்களில் ஆண்டவனுக்கு யாவரும் சமமே என்று கூறிட! ஆனால் பூரியார் புகல்கிறார் தீண்டாமை வேண்டும் என்று!!

இது இருபதாம் நூற்றாண்டு என்று நாம் நம்பவேண்டும்!

சமயத்துறையில் அவருடைய கருத்து இது—இதோடு நிற்பாரா பூரியார்! அரசியலும் எமக்கு உரியதே என்று அங்கும் வந்து நிற்கிறார்.

கதைகள் பல படித்திருக்கிறோம்— நாடாண்ட நாயகர்களைத் தம் பாதத்தில் வீழ்த்தி விருது பெற்று வீராப்புப் பேசிய மதத் தலைவர்களைப் பற்றி —ரஸ்புடீன்—ரிஷ்லு—இப்படிப் பலர் மேற்கே—இங்கே காகபட்டர் முதல் கணக்கற்றோர். அரசே நின் முடி எம் அடியில்— நீரோ மனிதர்க்கு அரசர்—யாமோ உமக்கே அரசர் என்று உருட்டு விழியால் ஊராள்வோனை அடக்கித் தம் அடிபணியச் செய்து நாட்டைத் தம்முடைய தாக்கி நாசம் புரிந்தோர் அமைச்சர் தம் ஆலோசனையை அலட்சிய

மாகப் புறக்கணித்து மடத்துத் தலைவரின் சொல் மந்திரம் என மயங்கிக் கிடந்த மன்னர் இங்குப் பலர்! அந்த நாள் இந்த நாள் என்று எண்ணினார் போலும் பூரியார்! அரசியலிலும் தமது மேதா விலாசத்தைப் புலப்படுத்தப் புறப்பட்டுவிட்டார்!

'தேசிய கீதம்' பாடப்படுவதைத் தாம் விருப்பவில்லை என்று கூறி, அது பாடப்படும்போது கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்துவிட்டாராம்!

'மதுரையில் மாதவன்' என்று அங்கலாய்க்கும் அரசியல் வாதிகளே? மாயப் பெருந்துயிலில் உள்ளீரோ? எங்கேனும் எப்படியேனும் தி. மு. க. அரசை, அமைச்சர்களை வசைபாடிட வேண்டும் உண்மையோ பொய்யோ அது பற்றிக் கவலை இல்லை—கிளிப்பிள்ளை மாதிரி சட்டம் ஒழுங்கு—சட்டம் அமைதி—தேசிய கீதம் என்று சில சொற்களை மந்திரமாக நினைத்து ஜபித்துக் கொண்டிருப்பீர்களே — எங்கே இரண்டு மூன்று நாட்களாக உங்களைக் காணோம்! தேசிய கீதத்தைப் பாடக் கூடாதாமே—சொல்கிறாரே—பூரியார்! இன்றைக்கு அதற்கு விளக்கம் வேறு கொடுத்துவிட்டார்—அந்தக் கீதத்தில் கேரளம் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் பெயர் இல்லையாம். அதனால் அது உண்மையான தேசிய கீதம் ஆகாதாம்!

எப்படி பூரியார் வாதம்? புரிகிறதா உமக்கு?

"திராவிட உத்ஜல வங்க......" இந்த வரி தேசியகீதத்தில் இருப்பது அவர் அறியாரோ? 'திராவிட' என்பது தமிழ் தெலுங்கு (ஆந்திரம்) கன்னடம், மலையாளம் (கேரளம்) என்பதை அவர் அறியாதவரோ? அவரா அறியாதவர்? இல்லை வயதானவர்தான்! ஆனாலும் ஏனோ சிறுபிள்ளைத்தனமான வாதம் ஒன்றை எடுத்து வீசுகிறார்!

சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை மாநிலத்தைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றவேண்டும் என்று கேட்டபோது சில 'பெரியவர்'கள் கேட்டார்கள் அல்லவா, நம்மைப் பார்த்து "தமிழ்நாடு என்ற பெயர் இலக்கியத்தில் இருக்கிறதா"? என்று அதுபோல இன்றைக்குப் பூரியார் கேட்கிறார், தேசிய கீதத்தில் எங்கே தமிழ்நாடு கேரளம் என்று! 'திராவிடம்' என்பது தமிழ்நாடு கேரளம், ஆந்திரம், கன்னடம் என்பதை அவர் அறியார் எனினும் அவருக்கு நாம் அறிவிப்போம்! பாவம், புண்ணியம், வேதம் விவேகம், மோட்சம், நரகம் ஆத்துமா பரமாத்துமா என்று அவர் பேசுவதற்கு என்று எவ்வளவோ பொருள்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிப் பேசினால் இன்றைக்கெல்லாம் பேசலாம் மறுநாளும் பேசலாம். ஏற்பாடு செய்வதற்கு ஆள் கிடைத்தால் ஒரு மாதம் முழுவதும் தொடர் உபந்நியாசமே செய்யலாம், வாரியார் போக முடியாத ஊர்களுக்கெல்லாம் இவர் போய் வரலாம்! ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு ஏனோ தெரியவில்லை தேச விவகாரத்தில் ஈடுபட்டுத் தேசீய கீதத்தில் 'சொட்டை' சொல்ல வந்துவிட்டார் பூரியார்! விசித்திரமான வாதம்! இந்திய அரசுக்குக் குல குருவாகிவிடலாம் என்ற நினைப்போ என்னமோ தெரியவில்லை!

இங்கே சிலர் இருக்கிறார்களே தேசியகீதம் பாடியபோது அந்த மந்திரி ஆடினார், அசைந்தார். அதனால் அவர் தேசிய கீதத்தை அவமதித்துவிட்டார் என்று சோக கீதம் இசைத்துக் கொண்டு—அவர்கள் எங்கே போனார்கள் இப்போது என்பதுதான் தெரியவில்லை. தேசிய கீதம் பாடியபோது வெளிநடப்பே செய்கிறார் ஒருவர் — மூச்சையே காணோமே? உடல் நலம் இல்லையோ பாவம்!

பூரியார்தானே — அப்படித்தான் செய்வார் என்றார் என் நண்பர் ஒருவர் 'ஏன் அவர் சுபாவமோ அது!' என்றேன். "இல்லை ஐயா, பூரியார் என்றால் கீழானவர் என்று பொருள் வள்ளுவர் எத்தனையோ இடங்களில் இந்தச் சொல்லை அந்தப் பொருளில் பயன்படுத்துகிறாரே நினைவில்லையா?" என்று கேட்டார்.

ஆம்! பூரி என்றால்—அற்பர் என்பது பொருள். பூர் என்றால் நெல்லில் பதர் என்பது பொருள்.

அப்புறம்என்ன, பூரியார், வேறெப்படிப் பேசுவார்?

❀

10-ம் பக்கத் தொடர்ச்சி

இவரு பத்து, பேருக்குக் கடன் கொடுக்கலாம் போயேன் பணம் பெருத்துப் போச்சி. சர்க்கார் தயவு இருந்தா, சீமானாவருங்க...

போர்:- ஆமாம்மா, ஆமாம்! திருமலை கூடச் சொன்னான் காங்கிரஸ் ஆட்சியிலே இலட்சாதிகாரி கோடீஸ்வரனாகிறான், ஏழை ஏங்கித் தவிக்கிறான்னு......

பணி:- நமக்கு அந்த எழவெல்லாம் எங்கே புரியுது. பெரிய மனுஷனுங்களுக்கு, எந்த மாதிரி ராஜாங்கம் வந்தாலும் அதுக்கு, கையைக் காலைப் பிடிச்சு விட்டு பிழைக்கத் தெரியுது...

போர்:- கொழுக்கத் தெரியுதுன்னு சொல்லம்மா, கொழுக்கத் தெரியுது...

[போகிறான்]

தம்பி! நாடகம் நடத்தச் சிரமமில்லை; அனுமதி பெறுவதில் சிரமம் ஏற்படக் கூடும்.

எனினும், தேர்தலுக்காக நாடாள்வோர் நாடகம் நடத்த ஏற்பாடு செய்யும்போது, நாம் இதுபோன்ற நாடகங்களை நடத்தியாக வேணடுமல்லவா! நடத்தக் கூடியதில் இது ஒன்று; கோடிட்டுக் காட்டினேன். உன் நண்பர்களுடன் கலந்து பேசினால் வேறு பல நாடகங்கள் உருவாகும். நாடகமாடி நாட்டுக்கு அறிவிக்க வேண்டிய உண்மைகள், அரசியல் நிகழ்ச்சிகள் ஏராளமாக உள்ளன. அவ்வப்பொழுது தெரிவிக்கிறேன். அத்தகைய நாடகங்களை நடத்துவதற்கு அனுமதி கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று என்னைக் கேட்டு, இக்கட்டில் மாட்டிவிடாதே, பொதுச் செயலாளரைக் கேட்டுக்கொள்ளடா அப்பா, பொல்லாதவனாயிற்றே, நீ.

அண்ணன்,

அண்ணாதுரை

(29—7—56 திராவிட நாடு இதழில்)

3 ம் பக்கத் தொடர்ச்சி

5. கல்விக்கொள்கை, இன்றைய வாழ்க்கை முறைக்கு ஒத்ததாக அமையாமை.

6. போதனையில் தெளிவின்மை—ஈடுபாடின்மை

7. போதகாசிரியர்களது மனக்குறை நாளுக்கு நாள் வளர்தல்.

8. அரசியல் காழ்ப்புணர்ச்சிகளில் மாணவர்கள் ஈடுபடுதல்—ஈடுபடுத்தல்.

முதலான பல்வேறுபட்ட காரணங்களால் இன்று கல்வியகங்களில் அறிவுக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதனை மறுக்க முடியாது — காமராசர் ஒருவர் நீங்கலாக!

காரணம், காமராசர் பள்ளிக்கூடங்களின் விரிவில் அக்கறை காட்டியதோடு நின்று—அதிலே 'தரம்' என்ற ஒன்றும் இருக்கிறது என்பதுபற்றி எண்ணிப்பாராத தால்!

போதாகாசிரியர்களது மனக் குறையும் இந்தத் தரக்குறைவை உண்டாக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறது. ஆசிரியர்கள், அவர்கள் அரசுப் பள்ளிகளில் பணியாற்றினாலும், தனியார் பள்ளிகளில் பணியாற்றினாலும், அந்த இரு துறைப் பள்ளிகளும் பலப் பல வேறுபாட்டோடு இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஊதியம் முதலானவைகூட, வேறுபாட்டில் இருக்கிறது.

அரசுப் பள்ளி ஆசிரியர்களானாலும் தனியார் பள்ளி ஆசிரியர்களானாலும் 'ஆசிரியர்' என்ற ஒரு தகுதியில் அனைவரும் ஒரே இனத்தவரே — சமூகத் தவரேயாவர். ஊதிய வேறுபாடு, வீட்டுப் படி, மருத்துவ வசதி—நகர ஈட்டுப்படி வசதி போன்ற சில வசதிகள் சிலருக்குக் கிடைக்கின்றன — சிலருக்குக் கிடைக்கவில்லை.

ஒரே பணியை ஆற்றிக் கொண்டிருப்போரிடையே இத்தகைய வேறுபாடுகளே மனக்குறையை யுண்டாக்கி வேலையில் ஈடுபாட்டைக் குறைத்து, செயலாற்றலையும் தடுத்துவிடப் போதியனவாகும்! இன்றைய நடைமுறையும் அப்படித்தானிருக்கிறது.

தனியார் பள்ளியிலோ, செய்கின்ற பணிக்குக்கூட, போதிய பாதுகாப்பின்மை வேறு நிலவுகிறது. பல்வேறுபட்ட பொருளாதார காரணங்களால், இன்று ஆற்றும் பணி, நாளைக்குக் கிடைக்குமா? என்ற உத்திரவாதமின்மை! எந்த மன ஆறுதலோடு சேவையில் முழுமையாக ஈடுபாடு கொள்ள முடியும்? ஆசிரியரது அக்கறை குறைகிறது. தரம் குன்றுகிறது.

அனைத்துக்கும் மேலாக கல்விக் கொள்கையினை வகுக்கும் முறை பல குறைபாடுகளையும், கேடுபாடுகளையும் ஈன்றெடுப்பதில் தன் பணியைக் குறைவாக விட்டுவிடவில்லை.

அரசாங்கம், அந்தக் கொள்கையினை வகுக்கின்ற போதில், தத்தம் அரசியல் கருத்துக்களைப் புகுத்த நினைக்கிற இழிச்செயல் காரணமாக விளைந்துவிட்டவை ஏராளம் ஏராளம்! எடுத்துக்காட்டுக்கு ஏடடங்காது! இதனை முதன் முதலாகச் செய்துகாட்டிய பெருமை காங்கிரசுக்கு உண்டு! கல்விக்கொள்கையில், அரசியல் நீரோட்டத்தை புகைமண்டலமாக்கிய கொடுமை சாதாரணமானதல்ல! கடுமையான விஷயம்! கண்டிக்கத்தக்க முறை! காங்கிரசுக் கட்சி, தன் எதிர்கால ஸ்திரத் தன்மைக்காக மேற்கொண்ட முறை! இன்று வரையிலே அது பரவிவரும் நிலைமை உருவாகி நிற்கிறது.

சென்ற இதழிலே எடுத்துக் காட்டியவாறு, காமராசர் அவ்வாறு மறுக்கவில்லையென்றால், இவ்வளவு குறைபாட்டுக்கும் அவரும், அவர் சார்ந்திருக்கிற கட்சியும் பதில் சொல்ல வேண்டியிருக்கும். அதனாலேயே தரம் கெட்டுப் போகவில்லை என்கிறார் அவர்.

அதோடு, தரம் தரம் என்று சொல்லி ஏழை எளிய மக்களுக்குக் கல்வி வாய்ப்பை இல்லையென்றாக்கி விடக்கூடாது என்கிறபோது, நமக்கெழுகிற ஐயம், கல்வியின் மூலம் மாணவர் உலகுக்கு ஒரு வாழ்க்கைத் தத்துவத்தைப் புரியச் செய்யவேண்டும்—தன்னம்பிக்கையை உருவாக்க வேண்டும்—செயலாற்றலை மிகுதிப்படுத்தி ஆக்கத் திறனுக்கு மாணவர்தம் அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்பதைவிட, 'எல்லோருக்கும் 'அ, ஆ, இ, ஈ,' படிக்கத் தெரிந்தால் சரி என்று இருந்தால் போதும் என்றே காமராசர் கருதுகிறாரோ! என்பது தான்!

தரம் பேணப்படுவதற்கும், எல்லோருக்கும் கல்வி என்பதற்கும் தொடர்பே இல்லை. எனினும் சென்ற இதழிலேயே எடுத்துக்காட்டி இருந்ததுபோல், அகலமாக உழுவதை விட, ஆழமாக உழுவது மேலாகும்.

> 1000 பேருக்கு அ, ஆ, படிக்கக் கற்றுத் தருவதை விட, 100 பேருக்கு வாழ்க்கை விளக்கத்தைப் புரியச் செய்வது நல்ல பயன் விளையும். அவர்களது தன்னம்பிக்கையை ஊக்குவித்து, வாழ்க்கையில் ஒரு பிடிப்பை உண்டாக்கி வைத்தால் போதும்! அவர்களை விஞ்ஞானிகளாக்கினால் போதும்! பொருளாதார விற்பன்னர்களாக்கினால் போதும்! கணித மேதைகளாக்கினால் போதும்! இதுதான் ஆழ உழுவதாகும்!

உருவாகின்ற கல்விக் கொள்கைகள் இந்த அடிப்படையில் உருவானாலே போதும்—காமராசரும், மற்றோரும் எதிர்பார்க்கும் பரவலான அறிவும், ஆற்றலும் அனைவருக்கும் பயன்பட வழியுண்டு, வாய்ப்புண்டு.

அகல உழுவதன்பேரால், ஆற்றல் தன்மையை, அறிவுபூர்வமான செயல் திறனை—வாழ்க்கைப் பிடிப்பை—நம்பிக்கையை ஏற்படுத்த இன்றைய சூழல் இடந்தராது. என்றென்றும் முடியாது, இப்போதைய முறையை மட்டுமே வைத்துக்கொண்டு.

கல்விக் கொள்கை உருவாக்கப்படுகிறபோது நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அது உருவாக வேண்டும். பொதுத் தன்மைகள் மட்டுமே அதில் காணப்படவேண்டும். அரசியல் நீரோட்டங்கள் முழுதுமாக விலக்கப்படவேண்டும்.

அப்போதுதான் தரமான கல்வியை எதிர்பார்க்க முடியும். அறிவாற்றலை எதிர்பார்க்க முடியும்!

அரசியல் பிடியிலிருந்து, ஆசிரியப் பெருமக்களையும், மாணவ மணிகளையும் காப்பாற்றிப் பிரித்துவிட அனைத்து அரசியல் கட்சிகளும் முடிவெடுத்து ஒதுங்கிக்கொண்டாலே, இந்த நிலை தானாகவே உருவாகக் கூடும்.

மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்வதென்பது வேறு; அதன் நடவடிக்கைகளிலே ஈடுபாடு கொள்வதென்பதுவேறு.

நாட்டு அரசியலோடு, உலக அரசியலையும்

முகப்பில்: தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு ஒ. பி. ராமன் அவர்கள்

பேற்றை இழந்திடவில்லை!

ஆழ்ந்த பெருங்கடல் போன்ற அறிவுடை
    அண்ணன் தலைமகனா இறந்தான்?—புகழ்
தாழ்ந்தத் தமிழகம் தன்னை விளித்தவன்
    தங்கத் திருமகனா இறந்தான்?—இவண்
வாழ்ந்தத் தனிமகன் வையம் வணங்கிட
    வாய்த்தப் பெருமகனா இறந்தான்?—பகை
சூழ்ந்தும் சுடுமொழி சொல்லா உயர்மகன்
    ஓங்குப் புகழ்மகனா இறந்தான்?

சுட்டி ஒருவிரல் ஊக்கம் விளைத்தவன்
    இழந்தே உணர்வினை ஓய்வானா?—உடல்
ஒட்டி வளர்ந்திடும் ஏழை உறவினர்
    உள்ளம் உடைந்திடப் போவானா?—தலை
தட்டித் தமிழரின் தூக்கங் கலைத்தவன்
    தானே உறங்கிடச் செல்வானா?—புகழ்
எட்டத் தமிழ்மொழி ஏங்கிக் கிடந்தவன்
    ஏக்கம் விளைத்திடல் செய்வானா?

சீரு பெறத்தமிழ் சிந்தை களித்தவன்
    சிறகை விரித்துயர் செல்வானா?—உயர்
மேரு வெனத்தமிழ் மக்கள் நிமிர்ந்திட
    மேன்மை விளைத்தவன் மாய்வானா?—வாய்
கூறு மொழியென வாய்த்தோன் தமிழினம்
    ஊமை யாகிடப் போவானா?—இப்
பாரும் வியந்திடும் தம்பி நெடும்படை
    மன்னன் பதைத்துயிர் சாவானா?

சோதித் திருநுதல்! தூயத் திருவுளம்!
    ஊக்கக் குளிர்விழி! உறங்கவில்லை!—அவன்
சீதத் திருமுகம்! சிந்தும் குறுநகை!
    இன்னும் நினைவினை நீங்கவில்லை!—குறள்
ஓதும் வழியினில் குறளின் உருவினில்
    ஓங்கிப் புகழ்மகன் ஒளிர்கின்றான்!—அவன்
கீதம் உணர்வினைத் தட்டும் அடஇனும்
    பேற்றை இழந்திட வில்லையடா!!

—மா. ப. அண்ணாதுரை.

என்றும் வாழ்வாய்!

எழுத்தறிவாய்! மேடையிலே ஏறி நின்று
    இயற்றமிழில் முழக்கமிட அறிவாய்! நின்றன்
கழுத்தினிலே கொடியர்வாள் வீழும் போதும்
    கருணையினைக் காட்டுதற்கும் அறிவாய்! நாளும்
அழுகின்ற ஏழையர்தந் துயரந் தன்னை
    ஆற்றுதற்கும் அறிவாய்நீ! ஆனால் அண்ணா,
பழியறியாய்! தமிழர்களை! ஏய்த்து வாழும்
    பாதையினை யறியாதச் சான்றோன் நீயே!

அண்ணாநின் விரலசைந்தால் அசையும் நாடு!
    அறிஞர்க்குத் திலகம்நீ! நாட்டு மக்கள்
எண்ணத்தில் தெய்வம்நீ! நினது பேச்சு
    இனிக்குநறுஞ் செந்தமிழ்த்தேன்! இதயம் மீட்டும்
பண்ணுக்கு நல்லிசைநீ! நாளும் நாளும்
    பாடுகின்ற கவிதைக்குக் கருப்பொருள்நீ!
எண்ணுகின்றோம் நின்பெருமை இவ்வாறாகி,
    ஏங்குகின்றோம் மறுகணமே! துயரில் மூழ்கி!

அண்ணாநின் பெருமையினைப் பகைவர் கூட
    அகமொப்பிப் பேசிடுவார்! தமிழ்க்கு வாய்த்த
எண்ணரிய பெரும்பேறு நின்னா லன்றோ!
    எவர்மறுத்தல் கூடுமிதை? நினது மேதை
எண்ணுகின்ற போதிலெலாம் வியப்பை நல்கும்!
    ஏஏஏ! தமிழ்க்குலத்தின் தலைவன் நீயே!
கண்ணீரைப் பொழிகின்றோம்! சின்னா ளாகக்
    கதறுகின்றோம், நின்பிரிவை எண்ணி யெண்ணி!

துயரங்கள் காலத்தால் ஆறு மென்றே
    சொன்னார்கள் முன்னோர்கள்! நினைப்பி ரிந்தத்
துயரமோ இன்றளவுங் குறைய வில்லை!
    துடிக்கின்றத் தம்பியர்கள் உகுக்குங் கண்ணீர்
வயல்பாய்ந்தால் பயிர்வளரும்! நதியாய், ஓடி
    வந்ததென்றால் மீன்கொழிக்கும்! கடலில்பாய்ந்தால்
உயர்வான உப்பாகும்! நன்றி யில்லார்
    உள்ளத்தில் அப்பண்பை விளைக்கும்! ஆமாம்!

—எம். முருகன்

கல்வியகங்கள் கற்றுக்கொடுக்கத்தான் செய்கின்றன. அதன் பரப்பை விரிவு படுத்தி—மாணவர்களது நேரடி ஈடுபாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டாகவேண்டும்.

கல்வியகங்களுக்கு ஏட்டறிவைப்பெற மட்டுமே மாணவர்கள் வருகை தரும் நிலையை மாற்றி, ஒரு வாழ்க்கை நெறியை, நாட்டுணர்வை, அறிவாற்றலை, செயல் திறனை மிகுதிப்படுத்திக் கொள்வதற்காகவே வருகை புரிகிறோம் என்ற நிலையை உண்டாக்க வேண்டும்.

ஏடுகளிலும், மேடைகளிலும் முழங்குவதால் மட்டுமே இவையாவும் நிறைவேறும் கொள்கைகளாக ஆகிவிடாது.

அரசினர், கடந்தகாலக் கேடுபாடுகளைக் களைய, தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த நடவடிக்கை—

மாணவர்களைக் காப்பாற்றி, தரத்தை உயர்த்தி, தன்னம்பிக்கையை வளர்த்து கல்வி ஒரு வாழ்க்கை முறை என்றாக்குவதாக இருக்க வேண்டும்.

அந்த நடவடிக்கை, அரசியல் பிடிப்புக்களிலிருந்து, ஆசிரியர்,மாணவர்களை விடுவிப்பதாயிருக்கவேண்டும். அந்த நடவடிக்கை கல்வியகங்களுக்கும் பெற்றோருக்கும் தொடர்புண்டாக்கக் கூடியதாயிருக்க வேண்டும். அந்த நடவடிக்கை, ஆசிரியர் மனக்குறைகளை அகற்றுவதாயிருக்க வேண்டும். அந்த நடவடிக்கை, மாணவர் உலகுதான் இந்த நாட்டின் எதிர்கால குடி என்பதை உருவாக்குவதாயிருக்க வேண்டும்.

அந்த நிலையைச் செயல் படுத்தும்போதுதான், ஓட்டு வாங்குவதற்காகவே எதையாவதுபேசி, எதையாவது திரித்து, எதையாவது முடிச்சுப்போட்டு எதையாவது உளறிக்கொண்டிருக்கும் காமராசர்களுக்குத் தெளிவேற்படும்! உண்மை புலப்படும்!

★

Kamala Sugar Mills Ltd.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P. O.)
Udumalpet S. Rly.,
Coimbatore Dt.

★

Liquid Glucose "Grade-A"

Now we have started production of our New Glucose "Grade-A" This Glucose is purified by "Demineraliser" which gives good colour and avoids stickness.

So it will be a great advantage to the consumers of glucose liquid for the manufacture of confectionary Sweets, Biscuits, Syrups Aerated waters and Pharmaceuticals.

Our Distributors for Madras, South Arcot North Arcot and Chingleput Districts:

P. Singaravelu,
310, Wall Tax Road, Madras-3

OUR SALES BRANCHES AT:

MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.